# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026.01.30 |


## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2026 சனவரியில் அதிகரித்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (கொநுவிசு, 2021=100)[1] அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு), தொடர்ச்சியாக மூன்று மாதங்களாக அதே மட்டத்தில் காணப்பட்டதன் பின்னர், 2026 சனவரியில் அதிகரித்தது. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) இலங்கை மத்திய வங்கியின் அண்மைய கால எறிவுகளுடன் பரந்தளவில் இசைந்துசெல்லும் வகையில், 2025 திசெம்பரின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 சனவரியில் 2.3 சதவீதத்திற்கு பதிவாகியிருந்தது.

| பணவீக்கம் கொநுவிசு (2021=100) | 2025 திசெம்பர் | 2026 சனவரி |
|---|---|---|
| சுட்டெண் பெறுமதி | 195.8 | 197.0 |
| மாதாந்த மாற்றம் (%) | 1.2 | 0.6 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 2.1 | 2.3 |

உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 திசெம்பரில் 3.0 சதவீதத்திலிருந்து 2026 சனவரியில் 3.3 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2026 சனவரியில் 1.8 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

**கொநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




மாதத்திற்கு மாதம் அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2026 சனவரியில் 0.59 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பிற்கு உணவு வகைகள் 0.21 சதவீதப் புள்ளிகளினால் பங்களித்த அதேவேளை உணவல்லா வகை 0.39 சதவீதப் புள்ளிகளால் பங்களித்தது.

அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2025 திசெம்பரின் 2.7 சதவீதத்திலிருந்து 2026 சனவரியில் 2.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

2026 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றில் ஆக்கப்பட்ட பணவீக்க எறிவுகள், பொருத்தமான கொள்கைகளின் ஆதரவுடன் 2026 இரண்டாமரையாண்டளவில் 5 சதவீதம் கொண்ட இலக்கினை நோக்கி பணவீக்கம் படிப்படியாக அதிகரிக்குமென எடுத்துக்காட்டுகின்றன.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்[அ]**

**கொநுவிசு[ஆ], காலாண்டுச் சராசரி, ஆண்டிற்கு ஆண்டு, %**

**2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது**




அ/ 2026 சனவரியில் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. இங்கே காட்டப்பட்டுள்ள பணவீக்க வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது.

ஆ/ வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் சகல கிடைக்கப்பெறுகின்ற தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

[§] *2023 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

***மூலம்:*** மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (கொநுவிசு, 2021=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)

| காலம் | | சுட்டெண் எண்ணிக்கை | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டிற்கான சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) | கொநுவிசு சுட்டெண் | கொநுவிசு (மைய) |
| 2025 | சனவரி | 192.6 | 178.4 | 0.5 | 0.7 | -4.0 | 1.2 | 0.4 | 3.2 |
| | பெப்புருவரி | 192.2 | 178.5 | -0.2 | 0.1 | -4.2 | 0.7 | -0.5 | 3.0 |
| | மாச்சு | 191.6 | 178.6 | -0.3 | 0.1 | -2.6 | 0.7 | -0.8 | 2.8 |
| | ஏப்பிறல் | 191.2 | 178.8 | -0.2 | 0.1 | -2.0 | 0.8 | -1.1 | 2.6 |
| | மே | 192.8 | 179.2 | 0.8 | 0.2 | -0.7 | 1.2 | -1.2 | 2.4 |
| | யூன் | 194.5 | 180.1 | 0.9 | 0.5 | -0.6 | 1.5 | -1.4 | 2.1 |
| | யூலை | 194.1 | 180.8 | -0.2 | 0.4 | -0.3 | 1.6 | -1.6 | 1.9 |
| | ஓகத்து | 193.3 | 180.9 | -0.4 | 0.1 | 1.2 | 2.0 | -1.5 | 1.8 |
| | செத்தெம்பர் | 193.7 | 181.2 | 0.2 | 0.2 | 1.5 | 2.0 | -1.4 | 1.7 |
| | ஒத்தோபர் | 193.8 | 181.4 | 0.1 | 0.1 | 2.1 | 2.2 | -1.2 | 1.6 |
| | நவெம்பர் | 193.4 | 181.3 | -0.2 | -0.1 | 2.1 | 2.4 | -0.8 | 1.6 |
| | திசெம்பர் | 195.8 | 181.8 | 1.2 | 0.3 | 2.1 | 2.7 | -0.5 | 1.6 |
| 2026 | சனவரி | 197.0 | 182.5 | 0.6 | 0.4 | 2.3 | 2.3 | 0.0 | 1.7 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

குறிப்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கமைவாக, ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கமும் மாதாந்த மாற்றமும் முழுத்தானமாக்கப்பட்ட சுட்டெண் இலக்கங்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டன.